கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **01.12.2025**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் துல்லிய உயிரியல் யுகத்தில் வளர்சிதைமாற்றவியல் என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம்

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பத் துறை இணைந்து, "துல்லிய உயிரியல் யுகத்தில் வளர்சிதைமாற்றவியல்" என்றஒரு நாள் கருத்தரங்கம் 29.11.2025 அன்று நடைபெற்றது. 150–க்கும் மேற்பட்ட இளநிலை உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் உயிரி தகவலியல் மாணவர்கள் பங்குபெற்று பயனடைந்தனர். இக்கருத்தரங்கில் உயிரி தொழில்நுட்ப தகவலியல் ஆராய்ச்சியாளர் திரு. விஷ்ணு ராஜ் அவர்கள், மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் நவீன உயிரியல் ஆராய்ச்சி மற்றும் துல்லிய மருத்துவத்தில் (precision–based healthcare) மெட்டபாலோமிக்ஸ்–ன் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த மெட்டபாலோமிக்ஸ் துறை ஆரம்பகால உயிர்வேதியியல் ஆய்வுகள் முதல் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்டரியை அடிப்படையாகக் கொண்ட விவரக்குறிப்பு வரை, குறிப்பிட்ட வளர்சிதை மாற்றங்களை கண்டறியும் பகுப்பாய்வு அணுகுமுறைகளையும் விவரித்தார். குரோமடோகிராமின் அடிப்படையில் எவ்வாறு வளர்ச்சிதை மாற்ற மூலக்கூறுகள் பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப்படுகிறது என்பதை செயல் முறையில் எடுத்துரைத்தார். வளர்ச்சிதை மாற்ற பகுப்பாய்வு மாதிரிகளை தயார் படுத்துவதற்கான செயல்முறை விளக்கம், வளர்ச்சிதை மாற்ற பகுப்பாய்வில் தரவு பகுப்பாய்விற்கு பயன்படுத்தப்படும் மென்பொருட்கள் மற்றும் புள்ளிவிவர சரிபார்ப்பு ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தினார்.

மேலும் இந்த மெட்டபலோமிக்ஸ் எவ்வாறு மருத்துவத்துறையில் தனிப்பட்ட மருத்துவ மாதிரிகளை கண்டறிய உதவுகிறது என்பதையும் பிற துறைகளான விவசாயம், உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயிர் தகவலியல் பயன்பாடுகள் மற்றும் இத்துறை சார்ந்த வேலைவாய்ப்புகளைப் பற்றி கூறினார்.

முதலில் எது தோன்றியது – மரபணு அல்லது அதன் கட்டுமானத் தொகுதிகளை உருவாக்கும் வளர்சிதைமாற்றிகளா?" என்று அவர் மாணவர்களிடம் வினாவியபோது மாணவர்கள் யூரி–மில்லர் பரிசோதனையைக் குறிப்பிட்டு, வளர்சிதைமாற்றி என சரியாக பதிலளித்தனர்.

தொடக்க நிகழ்வில் முனைவர். ச. வெள்ளைகுமார், இணை பேராசிரியர் தாவர உயிரித்தொழில்நுட்ப துறை, TNAU, கோயம்புத்தூர் வரவேற்புரை நிகழ்த்தினார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின், தாவர உயிரித்தொழில்நுட்ப துறை முனைவர். கே. ஹேமாப்ரபா, இணை பேராசிரியர் தொடக்க உரையாற்றினார். முனைவர். வி. ராஜன்பாபு துணை பேராசிரியர், தாவர உயிரித்தொழில்நுட்ப துறை, நன்றியுரையாற்றினார். இந்நிகழ்வை தாவர உயிரித்தொழில்நுட்ப துறை மற்றும் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**